

## வேலூரில்— கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம்:

# 2026-இல் 200 க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெல்ல, இளைஞர் அணியினர் முழு வீச்சில் செயல்பட வேண்டும்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!




**வேலூர்,ஜூலை.4-**

**வேலூர் மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``இளைஞர் அணியினர் கழகத்துக்கு வலுசேர்க்கும் வகையில், பணி ஆற்ற வேண்டும். தலைவர் அவர்கள் தொடங்கி வைத்துள்ள ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் முழுமையாகப் பங்கேற்று அதன் வெற்றிக்கு உழைக்க வேண்டும்” என்று அறிவுறுத்தினார்.**

**மேலும், மண் - மொழி - மானம் காக்க 2026-இல் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெல்ல, நம் இளைஞர் அணியினர் முழு வீச்சில் செயல்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டு, எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இது மிகவும் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி.

நேற்று இரவுதான் இப்படி ஒரு நிகழ்ச்சி வைத்துக் கொள்ளலாமா என்று உங்களின் அமைப்பாளர் இராஜமார்த்தாண்டம் அனுமதி கேட்டார். `சரி வைத்துவிடுங்கள் நான் வந்துவிடுகிறேன்', என்று சொன்னேன்.

குறுகிய காலத்தில் இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களை எல்லாம் சந்தித்ததில் கூடுதல் மகிழ்ச்சி. புதிய பொறுப்புகளுக்கு வந்திருக்கின்ற உங்கள் அத்தனைபேரையும் ஒரே நேரத்தில் சந்திப்பதில் எனக்கு கூடுதல் மகிழ்ச்சி. உங்கள் அத்தனைபேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கழகத்தின் இதயம்

நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். இன்னும் எத்தனை முறை கேட்டாலும் சொல்வேன். தூக்கத்தில் எழுப்பி கேட்டாலும் சொல்வேன். சட்டமன்ற உறுப்பினர், அமைச்சர், துணை முதலமைச்சர் இப்படி எத்தனையோ பொறுப்புகள் வந்தாலும், எனது மனதிற்கு மிகவும் நெருக்கமான பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான்.

அந்த உணர்வுடன்தான் இன்றைக்கு உங்களை எல்லாம் சந்திக்க வந்து இருக்கிறேன். உங்களுக்குத் தெரியும் கழகத்தில் 25 அணிகள் இருக்கின்றன. 25 அணிகள் இருந்தாலும், கழகத்தின் இதயம் என்று கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட அணி, முதன்மையான அணி என்று கலைஞரால் பாராட்டப்பட்ட அணி என்றால், அது நம் தலைவர் உருவாக்கிய நம் இளைஞர் அணிதான்.

இந்த இளைஞர் அணிக்குப் பல பெருமைகள் இருக்கின்றன. அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவிலே எத்தனையோ இயக்கங்கள் இருக்கின்றன. இன்றைக்கு எல்லா இயக்கங்களிலும் இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், இந்தியாவிலேயே முதன்முறையாக இளைஞர் அணியைத் தொடங்கியது திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதைத் தொடங்கியவர் நம் தலைவர் அவர்கள்தான். அப்படிப்பட்ட இளைஞர் அணியில் நீங்கள் எல்லாம் இன்றைக்கு பொறுப்புக்கு வந்து இருக்கிறீர்கள். இளைஞர் அணியில் இருப்பது நமக்கெல்லாம் பெருமை. அதைத்தான் நான் தொடர்ந்து சொல்கிறேன்.

### உழைப்பால் வந்த பதவி

இளைஞர் அணியில் இன்றைக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்களாக, துணை அமைப்பாளர்களாக, நிர்வாகிகளாக நீங்கள் வந்து இருக்கிறீர்கள். `நான் ஒன்றும் பரிந்துரையில் மட்டும் வரவில்லை. என் உழைப்பால்தான் வந்திருக்கிறேன்' என்று,நீங்கள் காலரை தூக்கிவிட்டுக்கொண்டு சொல்லலாம். பல கட்டங்களுக்குப் பிறகுதான் உங்களை எல்லாம் பார்த்து, பார்த்து இந்தப் பொறுப்புகளுக்கு நாங்கள் நியமித்து இருக்கிறோம்.

மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்களின் பரிந்துரைகளையும் வாங்கி, அதேபோல் நம் மாநில துணைச் செயலாளர்கள் உங்கள் மாவட்டத்திற்கு வந்து, உங்கள் ஒவ்வொருவரையும் பல மணிநேரம் சந்தித்து, நேர்காணல் நடத்தி அவர்கள் தந்த பட்டியலின் அடிப்படையிலும், ஏற்கெனவே இருக்கின்ற நிர்வாகிகள் செய்த பணிகள், அவர்களின் மினிட் புத்தகங்கள், அவர்களிடம் இருக்கின்ற புகைப்படங்களைப் பார்த்து, பார்த்துதான், எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொண்டுதான், தலைவரின் ஒப்புதலோடு உங்களை நியமனம் செய்து இருக்கிறோம்.

இந்த நியமனங்களை இறுதி செய்வதற்குள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது 2 மணி நேரம் ஆகிவிட்டன. நான், உங்களின் மண்டல பொறுப்பாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட அமைப்பாளர் இராஜமார்த்தாண்டம், அன்பகம் செந்தில் என நாங்கள் நான்கு பேரும் உட்கார்ந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது 2 மணி நேரம் செலவு செய்துதான் ஒவ்வொருவரையும் தேர்வு செய்து இருக்கிறோம். ஒவ்வொருவரையும் அலசி, ஆராய்ந்து தேர்வு செய்து இருக்கிறோம்.

இதை ஏன் நான் திரும்ப, திரும்பச் சொல்கிறேன் என்றால், அந்த அளவுக்கு உங்களுக்குப் பொறுப்பு அதிகமாகி இருக்கிறது. நீங்கள் நினைத்துக்கொண்டு இருக்கிறீர்கள், பதவி கொடுத்து இருக்கிறார்கள் என்று. தயவுசெய்து இதை பதவியாக மட்டும் கருதாதீர்கள். உங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருப்பது பொறுப்பு என்பதை உணர்ந்து பொறுப்போடு செயல்பட வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

### ஆலோசனையும், அனுமதியும்

இளைஞர் அணி என்பது ஒரு சார்பு அணி. எனவே, நீங்கள் எந்தப் பணிகளை செய்தாலும் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அவர்களின் ஆலோசனையையும், அனுமதியையும் பெற்று பணிகளைச் செய்ய வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பகத்திலிருந்து கொடுக்கப்படுகின்ற பணிகளாக இருந்தாலும் சரி, தலைவர் கட்டளையிடுகின்ற பணிகளாக இருந்தாலும் சரி, ஒன்றிய அமைப்பாளராக இருந்தால், அதை நீங்கள் ஒன்றியச் செயலாளரிடம் சொல்லிவிட்டு, அவர்களுடன் கலந்து ஆலோசனை செய்து, அனுமதியைப் பெற்று அந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்களுடன் தொடர்பில் இருந்து, அவர்களின் ஆலோசனைகளையும், அனுமதியையும் பெற்று உங்களின் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் உங்களிடம் உரிமையுடன் கேட்டுக்கொள்வது, எந்தச் சிறிய தவறுக்கும் இடம் கொடுக்கக்கூடாது. சமூக வலைதள காலம் இது. சமூக வலைதளத்திலும் சரி, தொலைக்காட்சியிலும் சரி, எந்த அளவிற்கு செய்திகளைப் பரப்புகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். குறிப்பாக, பொய்ச் செய்திகளை எப்படிப் பரப்புகிறார்கள்? உண்மை சென்று சேர்வதைவிட, பொய்தான் சீக்கிரமாகச் சென்று சேரும். வதந்திகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். அதுபோல எந்தவிதமான ஒரு சிறிய தவறும் நம் மேல் யாரும் சொல்லிவிடக்கூடாது. அதற்கு நாம் அனுமதி கொடுக்கவே கூடாது. அதிலும் குறிப்பாக, இளைஞர் அணி தம்பிமார்கள், நிர்வாகிகள் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

### கவனமாக செயல்படுங்கள்

நம் மீது இப்போது எந்தக் குறையும் சொல்ல முடியாமல் இருக்கிறார்கள். தலைவர் மீதும், ஆட்சியின் மீதும் குறைகள் கண்டுபிடிக்க முடியாத நேரத்தில் யாராவது ஒரு சிறிய தவறு செய்துவிட மாட்டார்களா? அதை பெரிதாக பூதாகரமாக்கி சொல்லிவிட முடியாதா என்று காத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதுமாதிரியான நேரத்தில் நாம் மிகவும் கவனமாக, எந்த செயலில் ஈடுபட்டாலும் அதில் மிகவும் கவனமாக, நல்ல எண்ணத்தோடு, மக்களுக்கு சேவை செய்யும் எண்ணத்தோடு ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இளைஞர் அணியைப் பொறுத்தவரை, இந்த மேடையிலேயே பல உதாரணங்கள் இருக்கின்றன. அண்ணன் நந்தகுமார் அவர்களே சொன்னார்கள். இளைஞர் அணியில் அவரின் செயலால், களப்பணி, கழகப்பணி, மக்கள் பணியால் இன்றைக்கு எந்த அளவிற்கு உயர்ந்து இருக்கிறார் என்று. அதற்குக் காரணம் அவரின் உழைப்புதான். நான் உங்களிடம் ஒன்றே ஒன்றுதான் சொல்வேன். கண்டிப்பாக களத்தில் நீங்கள் வேலை செய்தால், உங்களுக்கான அங்கீகாரத்தை நம் தலைவர் அவர்கள் சரியான நேரத்தில் நிச்சயமாகத் தருவார்.

அதற்கு உதாரணமாக, இளைஞர் அணியில் சிறப்பாகச் செயல்பட்டு இன்றைக்கு மாவட்டக் கழகச் செயலாளர்களாக, ஒன்றியக் கழகச் செயலாளர்களாக, பேரூர் கழகச் செயலாளர்களாக பல பேர் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர் பெருமக்களாக, இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டின் முதலமைச்சரைக் கொடுத்தது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி என்பதை நீங்கள் உணர வேண்டும்.

### சரியாக பராமரியுங்கள்

உங்கள் அனைவருக்கும் மினிட் புக் வழங்கப்பட்டு இருக்கிறது. அந்த மினிட் புக்கை தயவுசெய்து சரியாக பராமரியுங்கள். நீங்கள் எந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும் அதில் பதிவு செய்து, அந்த நிகழ்ச்சிக்கு வந்து இருக்கின்ற தலைமைக்கழக நிர்வாகிகளாக இருக்கட்டும், மாவட்ட கழக நிர்வாகிகளாக இருக்கட்டும், இல்லை, நம் இளைஞர் அணி நிர்வாகிகளாக இருக்கட்டும் அல்லது மற்ற அணிகளின் நிர்வாகிகளாக இருக்கட்டும் அவர்களிடம் ஒரு கையெழுத்து வாங்குங்கள்.

நாளை யாராவது உங்கள் மீது குறை சொன்னார்கள் என்றால், இவர் எந்த பணியும் செய்யவில்லை. எந்த நிகழ்ச்சிக்கும் வரவில்லை என்று யாராவது புகார் கொடுத்தார்கள் என்றால், இல்லை நான் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டேன், நான் அனைத்துப் பணிகளையும் செய்து இருக்கிறேன் என்று எடுத்துக்காட்டுவதற்கான ஒரு ஆதாரம்தான், உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள மினிட் புக். இப்போது எல்லோரும் மினிட் புக்கை பராமரிப்பது கிடையாது. எல்லோரும் அலைபேசியில் கொண்டு வந்துவிட்டார்கள் மினிட் புக்கை. நிச்சயமாக நீங்கள் அதைப் பராமரிக்க வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அதுதான் உங்களுக்கு மிகச் சிறந்த ஆதாரம் என்பதை மீண்டும் கூறிக்கொள்கிறேன்.

### இளைஞர் அணியின் உழைப்பு

அடுத்து வர இருக்கின்ற தேர்தலுக்கு நம் கையில் வெறும் 8 மாதங்கள்தான் இருக்கின்றன. இந்த 8 மாதங்களில் உள்ள ஒவ்வொரு மணித்துளியும், ஒவ்வொரு நிமிடமும் நமக்கு முக்கியமான நிமிடங்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும். அதிலும் இளைஞர் அணிக்கு மிகமிக முக்கியம். ஒவ்வொரு தேர்தல் பிரச்சாரத்தின்போதும், நான் ஒவ்வொரு மாவட்டமாக சென்று, அங்கு இருக்கின்ற மக்களை சந்தித்துவிட்டு, நிர்வாகிகளைச் சந்தித்துவிட்டு பிரச்சாரம் செய்து, அந்த மாவட்டத்தை விட்டு, அடுத்த மாவட்டத்திற்கு செல்லும்போது அங்கு இருக்கின்ற மாவட்டக் கழகச் செயலாளரிடமும், வேட்பாளரிடமும் சொல்வேன்.

நிச்சயமாக இந்த தேர்தல் வெற்றியில் எங்கள் இளைஞர் அணி தம்பிமார்களின் உழைப்பு இருக்கிறது என்று நீங்கள் சொல்வீர்கள் என்று கடந்த 5 வருடங்களாக நடக்கின்ற சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் அனைத்துத் தேர்தல்களிலும் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அதேபோல், வெற்றிபெற்றுவிட்டு வந்து அந்த வேட்பாளராக இருக்கட்டும், அந்த மாவட்டக் கழகச் செயலாளராக இருக்கட்டும் என்னை சந்திக்கும்போது, `இந்த முறை இளைஞர் அணி தம்பிமார்கள் களத்தில் இறங்கி சிறப்பாக வேலை பார்த்தார்கள். இந்த வெற்றிக்கு முழுகாரணம் இளைஞர் அணி தம்பிமார்களின் உழைப்பு' என்று என்னிடம் சொல்வார்கள்.

அந்த விதத்தில் இந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர வேண்டும் என்றால், நம் தலைவர் அவர்கள் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், இளைஞர் அணி தம்பிமார்கள் உங்களின் உழைப்பு மிகமிக முக்கியம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அண்ணன் நந்தகுமார் அவர்கள் சொன்னதைபோல், தலைவர் அவர்கள் ஒரு முன்னெடுப்பைக் கொடுத்து இருக்கிறார்கள். ஒரு இலக்கை நிர்ணயித்து கொடுத்து இருக்கிறார்கள். `ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்புதான் அந்த இலக்கு. அதற்கான செயல் வடிவங்கள் எல்லாம் உங்கள் மாவட்டக் கழகத்தில் இருந்து உங்களுக்குச் சொல்வார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்புகூட காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடந்தது. தலைவர் பேசிவிட்டு, அடுத்து சார்பு அணிகள் சார்பாக என்னைதான் பேச வைத்தார்கள். ஏனென்றால் தலைவருக்கு தெரியும். இளைஞர் அணி தம்பிமார்களின் பணி எவ்வளவு முக்கியம் என்று தெரியும். அப்போது நான் சொன்னேன். நாங்கள் இளைஞர் அணி சார்பாக தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

இல்லந்தோறும் இளைஞர் அணி என்று வீடு, வீடாகச் சென்று இளைஞர் அணிக்கு உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு இருக்கிறோம். கழக ஆட்சியின் சாதனைகளை, கழகத்தின் கொள்கைகளை, வரலாற்றைச் சொல்லிச் சொல்லி ஒவ்வொருவராக சேர்த்துக்கொண்டு இருக்கிறோம். எனவே, இதில் எங்களுக்கு அனுபவம் இருக்கிறது என்று சொல்லிவிட்டுச் சொன்னேன். நிச்சயமாக அந்த அனுபவத்தை வைத்து எங்களுக்கு இந்த ஓரணியில் தமிழ்நாடு இலக்கிலும் எங்கள் இளைஞர் அணி தம்பிமார்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும், முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று தலைவரிடம் அன்று சொன்னேன். அதை நீங்கள் காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு சொன்னேன்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் குறைந்தது 30 சதவிகித வாக்காளர்களை நம் கழகத்தில் உறுப்பினராகச் சேர்த்தாக வேண்டும். உங்கள் ஒவ்வொருவரிடமும் 150 வாக்குகள், நான் சொன்னால் இந்த 150 பேர் கேட்பார்கள், இந்தத் தெருவே என் கட்டுபாட்டில் இருக்கும், நான் சொல்வதைக் கேட்பார்கள். நம் கழகத்திற்கு வாக்களிப்பார்கள் என்று உங்கள் கட்டுப்பாட்டில் வந்துவிட்டால், உங்களை யாராலும் தவிர்த்துவிட்டு செல்ல முடியாது. அதுதான் உங்களின் முக்கியத்துவம்.

அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் மக்களோடு, மக்களாக ஒன்றிப் பழக வேண்டும். மக்களோடு, மக்களாக இருக்க வேண்டும். அவர்களிடம் பேச வேண்டும். ஆட்சியின் சாதனைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். சில நேரங்களில் அவர்கள் குறைகளைச் சொல்வார்கள். சில நேரங்களில் அவர்களின் தேவைகளைச் சொல்வார்கள். அவற்றை காது கொடுத்துக் கேட்க வேண்டும். நாம் செய்து கொடுக்கிறோமோ, இல்லையோ அவர்களின் குறைகளைக் கேட்டாலே பாதி பிரச்சினை தீர்ந்துவிடும்.

உங்களால் அவற்றை செய்ய முடிந்தால் நீங்களே செய்து முடித்து விடுங்கள். இல்லையென்றால் உங்கள் பகுதியில் இருக்கின்ற மாநகராட்சி பிரதிநிதியிடமோ, உங்கள் மாவட்டக் கழகச் செயலாளரிடமோ, சட்டமன்ற உறுப்பினரிடமோ அதை எடுத்துச் செல்லுங்கள். இல்லையென்றால் மாவட்ட அமைப்பாளரிடம் சொல்லுங்கள், இல்லையென்றால், அன்பகத்திற்கு அந்தச் செய்தியை அனுப்பினீர்கள் என்றால், அங்கிருந்து அந்த பிரச்சினையைத் தீர்த்துக் கொடுப்பதற்கான முழு முயற்சியில் ஈடுபடுவோம்.

### 730 கோடி பயணங்கள்

தொடர்ந்து அடுத்த 8 மாதங்களுக்கு ஆட்சியின் 5 முக்கியமான சாதனைகளை மட்டும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அதை மக்களிடம் பேசிக்கொண்டே இருங்கள். ஏனென்றால், மக்கள் மறந்துவிடுவார்கள். முதலாவது திட்டம் விடியல் பயணம் திட்டம். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தலைவர் போட்ட முதல் கையெழுத்து விடியல் பயணம் திட்டம். இந்த நான்கு வருடத்தில் மட்டும் 730 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

இரண்டாவதாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இந்த திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக நாம்தான் அறிமுகப்படுத்தினோம். எப்படி தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்துகிறார்கள் என்று இப்போது இந்தத் திட்டத்தைப் பல மாநிலங்களில் இருந்து வந்து பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். இதனால் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற, பள்ளிக்கூடத்திற்கு வருகின்ற மாணவர்களின் வருகைப் பதிவு விகிதம் அதிகமாகி இருக்கிறது. இந்தத் திட்டத்தில் ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். அதேபோல, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் மூலம் 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் சென்றுகொண்டு இருக்கிறது. நம் தலைவர் அவர்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவை மட்டுமல்ல, தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் போன்ற ஏகப்பட்ட திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். இதையெல்லாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டியது நமது கடமை.

### பா.ஜ.க–வுக்கு அடகு

நமது எதிர்த்தரப்பில் யார் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஒன்றிய பாசிச பா.ஜ.க-வும், அவர்களுடன் கூட்டணி வைத்திருக்கும் அடிமை கட்சியான அ.தி.மு.க.-வும்தான் நமக்கு எதிரில் இருக்கிறார்கள். எடப்பாடி பழனிசாமி அவர்கள் நான்கு மாதங்களுக்கு முன்பு என்ன சொன்னார்? இந்த தேர்தல் இல்லை, 2026 தேர்தல் இல்லை, 2036 தேர்லிலும் நாங்கள் பா.ஜ.க-வோடு கூட்டணி வைக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டு, அடுத்த விமானத்தைப் பிடித்து, டெல்லிக்கு திருட்டுத்தனமாக சென்று, மூன்று கார்கள் மாறி கூட்டணி வைத்துவிட்டு வந்துவிட்டார்.

இவர்களுக்கு எல்லாம் நாம் தகுந்த பாடத்தை எடுக்க வேண்டும். நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, கடந்த பத்து வருடத்தில் மாநிலத்தின் அத்தனை உரிமைகளையும் பா.ஜ.க-வுக்கு அடகு வைத்தார்கள். இப்போது மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள் என்றால், தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் அடகு வைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

எனவே, இதை நீங்கள் புரிந்துகொண்டு, இந்தத் தேர்தல் தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கு எவ்வளவு முக்கியம், நமக்கு எவ்வளவு முக்கியம், தமிழ்நாட்டு மாணவர்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து, செயல்பட்டு இந்தத் தேர்தல் வெற்றியைப் பெற்றுத்தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

### களப்பணி மிக மிக முக்கியம்

இளைஞர் அணி தம்பிமார்கள் உங்களிடம் மீண்டும் சொல்கிறேன். நம் கழகத்தில் எத்தனையோ அணிகள் இருந்தாலும், முதன்மையான அணி, முதல் அணி என்றால் அது இளைஞர் அணிதான் என்பதை நீங்கள் உணர்ந்து, இந்தத் தேர்தலில் செயல்பட வேண்டும். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று அண்ணன் நந்தகுமார் அவர்கள் சொன்னார்கள். 200 தொகுதிகள் இல்லை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் வெற்றிபெற்றாக வேண்டும். அதற்கு நம் களப்பணி மிக மிக முக்கியம் என்பதை உணர்ந்து நீங்கள் செயல்பட வேண்டும். மீண்டும் அடிக்கடி நாம் சந்திப்போம். உங்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், அமுலு, மாவட்ட அவைத் தலைவர் முகமது சகி, மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இராஜமார்த்தாண்டம், மாநகர அமைப்பாளர் ரவிக்குமார், துணை மேயர் சுனில்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் என்.பிரகாஷ், பாலாஜி, அர்ச்சனா நவீன்சங்கர், டீட்டா சரவணன், ராஜ்கமல், சத்தியமூர்த்தி, மாநகர துணை அமைப்பாளர்கள் முரளி பாஸ்கர், பன்னீர் செல்வம், கே.டி.சுரேஷ், சதீஷ்குமார், தினேஷ்குமார், இப்ராஹிம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.